1979 பிப்ரவரி 22]

[முற்பகல் 10–00.]

அரசு மருத்துவ மனைகளில் ஓமியோபதி பிரிவுகள்.

*வினா எண். 135—திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—தமிழ்நாட்டில் அரசு மருத்துவ மனைகளில் அரசு ஓமியோபதி பிரிவு ஆரம்பித்து பல படித்த இளைஞர் களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்படி அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராசன்: திண்டுக்கல்லில் உள்ள மதுரை மாவட்ட தலைமை மருத்துவ மனையில் ஹோமியோபதி மருந்தகம் ஒன்று 1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ம் நாள் முதல் செயல்பட தொடங்கியுள் ளது. மற்றொன்று சேலம் தலைமை மருத்துமனையில் ஆரம் பிப்பதற்கான அனுமதி அண்மையில் வழங்கப்பட்டுள்ளது. இவை களை அனுபவமாகக் கொண்டு மேலும் அரசு மருத்துவமனைகளில் ஹோமியோபதி பிரிவு ஆரம்பிப்பது பற்றி நடவடிக்கை எடுக் கப்படும்.

ஓமியோபதி மருந்தகங்கள்

*வினா எண். 136—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமியோபதி மருந்தகங்கள் நமது மாநிலத்தில் எத் தனை உள்ளன?

(ஆ) உள்ளிருப்பு நோயாளிகள் தங்கி மருத்துவம் பெற எத்தனை மருத்துவ மனைகள் உள்ளன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராசன் : (அ) திண்டுக்கல்லுள்ள மதுரை மாவட்ட தலைமை மருத் துவமனையில் ஹோமியோபதி மருந்தகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. சேலம் மாவட்ட மருத்துவமனையில் ஹோமியோபதி மருந்தகம் திறப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) சென்னை அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி யுடன் இணைக்கப்பட்ட ஹோமியோபதி மருத்துவமனை ஒன் றில் மட்டுமே உள்ளிருப்பு நோயாளிகள் மருத்துவம் பெற வசதி உள்ளது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் இதுவரை ஓமியோபதி மருத்துவத் துறையில் படித்துத் தேறிய மாணவர்கள் எத்தனைபேர்கள் இருக்கிறார்கள்? அவர்கள் அனைவருக்கும் வேலை கொடுக்கப்பட்டுவிட்டதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, இதுபற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை, தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, ஓமியோபதி மருத்துவமனைகளுக்குச் செலவு குறைவாக ஆகும் என்று கருதுகிறேன். அப்படியிருந்தால், ஏழை எளிய மக்கள் பயன்பெறத் தக்க அளவிற்கு, கிராமப்புறங்களில் இப்படிப்பட்ட மருத்துவ மனைகளை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, இப்படிப்பட்ட ஓமியோபதி மருத்துவ மனைகளைக் கிராமப்புறங்களில் நிறுவ வேண்டுமென்ற காரணத்திற்காக, பஞ்சாயத்து ஒன்றியங்களில் ஓமியோபதி மருந்தகங்களைத் திறப்பதற்கான சாத்தியக் கூறுகளைப்பற்றி ஊராட்சி வளர்ச்சி இயக்குநர் துறையிடத்தில் கேட்டிருக்கிறோம். அது ஆராய்ச்சியில் இருக்கிறது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, ஓமியோபதி பிரிவுகளை மருத்துவமனைகளில் ஏற்படுத்த வேண்டிய சில யோசனைகளைப்பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். நல்லது. அதேபோன்று ஆயுர் வேதம், சித்தம்ஆகிய இரண்டும் நம் நாட்டு மருத்துவ முறை மருந்துகள். அவற்றைப் பிரபலமாக மக்கள் இன்று வரவேற்றுக்கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் அதில் அதிகமான பிரிவுகளை ஏற்படுத்த அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, நம்முடைய தமிழகத்தின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்து இருக்கின்ற சித்த மருத்துவத் துறையை விரிவாக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த அரசு இன்றைக்கு அதுபோன்ற மருத்துவப் பிரிவுகளைப் பல்வேறு மருத்துவமனைகளில் உருவாக்கவும், இருக்கின்ற சித்த மருத்துவப் பிரிவுகளை விரிவாக்கவும் இன்றைக்குத் திட்டமிட்டு அது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதைப்போலவே ஆயுர்வேத மருத்துவ மனைகளை ஆங்காங்கு நிறுவுவதற்கான திட்டமும் பரிசிலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

1979 பிப்ரவரி 22]

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவரவர்களே, (Indigenous system of medicine) என்ற முறையில் யூனானி முறைக்கு ஊக்கம் தரும் முறையில் யூனானி மருத்துவக் கல்லூரியை ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிறது. அதைப் பரிசீலித்து ஏற்றுக்கொள்ளப்படுமா? யூனானி மருத்துவத் துறைப் பிரிவுகளை மருத்துவமனைகளில் ஆரம்பிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, ஏற்கனவே அண்ணா மருத்துவமனையில் யூனானி மருத்துவப் பிரிவும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. யூனானி கல்லூரி ஒன்றைச் துவங்குவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ஓமியோபதி மருத்துவர்களில் பலர் அலோபதி மருத்துவ முறையில் ஊசி போடுகிறார்கள், அலோபதி மருந்துகளைக் கொடுக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? அதிலே குறிப்பிட்ட சில பகுதிகளில் நரிக்குறவர்கள்கூட இத்தகைய அலோபதி முறையில் ஊசி போட்டுக்கொண்டு வருவது, அனுமதியில்லாமல் ஊசி போட்டுக் கொண்டு வருவது அரசுக்குத் தெரியுமா? அதைத் தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, அப்படி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அதுபோல நடைபெற்றுக் கொண்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவிப்பார்களேயானால் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, ஓமியோபதி கவுன்சிலில் அங்கத்தினர்களை 2—11—1978-ஆம் தேதி அன்று தேர்தல் செய்த பிறகும் இதுவரையிலும் அதற்குக் கவுன்சில் சேர்மன் தேர்ந்தெடுக்கப்படவில்லை, இந்தக் கவுன்சிலை அமைக்காமல் இருப்பதற்குக் காரணம் என்ன? அத்துடன், இப்பொழுது மருத்துவக் கல்லூரிகளில் இட நெருக்கடியிருக்கிறது. ஓமியோபதி மெடிகல் ட்ரீட்மெண்ட் என்றால் ஏழைகளுக்குக் குறைந்த விலைக்குக் கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே, இவைகளை அதிகரிக்க ஓமியோபதி படிப்பதற்குள்ள வாய்ப்பை ஏற்படுத்த அதிகக் கல்லூரிகளை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1979 பிப்ரவரி 22

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவரவர்களே, தற்பொழுது ஓமியோபதி கல்லூரி ஒன்று சென்னையில் செயல்பட்டு வருகிறது. அதைக் கட்டிடம் கட்டி விரிவுப்படுத்துகின்ற திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருந்துக் கொண்டிருக்கிறது. அடுத்து, கவுன்சிலைப்பற்றிக் கேட்டக் கேள்விக்குத் தனிக் கேள்வி போடுவார்களேயானால் விரிவான பதிலைச் சொல்லலாம்.

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவரவர்களே, பெருவாரியான கிராமப்புற பகுதிகளில் ஓமியோபதி மருத்துவர்கள் என்று சொல்லிக்கொண்டு பல பேர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்கள் உண்மையாக ஓமியோபதி மருத்துவப் படிப்பு படித்தவர்களா என்பதை ஆராய இந்த அரசு, மக்கள் நல்வாழ்வைக் கருதி ஆய்வு எடுக்குமா என்பதை அறிய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவரவர்களே, அப்படித் தவறு நடைபெறுவதைச் சுட்டிக் காட்டுவார்களேயானால் அதன்மேல் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

திரு. க. மருதாசலம்: பேரவைத் தலைவரவர்களே, கோவை நகரம்—5 இலட்சம் மக்களைக் கொண்ட அந்த மாபெரும் நகரத்தில் ஓமியோபதி மருத்துவமனை ஒன்றை அரசு சார்பில் ஏற்படுத்த உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புவதோடு ஒரே மருத்துவமனையில் ஓமியோபதி, அல்லோபதி, சித்த வைத்தியம் பல்வேறு மருத்துவப்பிரிவுகளை, வைத்திருக்கிறார்கள். அதைத் தனித்தனியாக நிறுவ அரசுக்கு உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, ஓமியோபதி மருத்துவமனையை எல்லா மாவட்டங்களிலும் உருவாக்க வேண்டுமென்பதுதான் அரசினுடைய திட்டம். அதனுடைய முதல் கட்டமாக சேலத்திலே துவங்கப்பட இன்றைக்கு ஆவன செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கனவே, திண்டுக்கல்லில் இந்தப் பிரிவு செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. இதனுடைய ஆய்வை அறிந்ததற்குப் பின்னாலே, அதற்குப் பிறகு ஏனைய மாவட்டங்களில் விஸ்தரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஒரே மருத்துவமனையில் பல்வேறு மருத்துவப் பிரிவுகள் செயல்படுவதனால் குழப்பம் ஏற்படுகிறது என்று இங்கே குறிப்பிட்டார்கள். ஒவ்வொரு மருத்துவப் பிரிவையும் நன்கு புரிந்து கொள்ளக்கூடிய வகையில், அந்தந்த மருத்துவமனையில், இது, இது இந்த, இந்தப் பிரிவைக் குறிக்கும் என்று எல்லோருக்கும்

விளங்கும்படியாக விளம்பரப் பலகைகள் போடப்பட்டிருக்கின்றன. ஆகவே, குழப்பம் ஏற்பட வாய்ப்பு ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, கிராம சித்த வைத்தியசாலைகளுக்கு வழங்கக்கூடிய மருந்துகள், ஓராண்டுக்குக் கொடுக்கக்கூடிய மருந்துகள் 2 மாதம் கூட வருவதில்லை என்ற புகார் அரசுக்கு வந்துள்ளதா ? அப்படியானால் அதைப் போக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, சித்த மருத்துவப் பிரிவுக்கு வழங்கப்படுகிற மருந்துகள் சில இடங்களில் பற்றாக்குறையாக இருக்கிறது, சில இடங்களில் தேவைக்கு அதிகமாக இருக்கிறது என்பது இப்பொழுது ஆய்வு செய்யப்படுகிறது. ஆகவே இனிமேல், மருந்துகளை வழங்கும்போது அதிகமாகத் தேவைப்படும் இடங்களுக்கு அதிகமாகவும் குறைவாகத் தேவைப்படும் இடங்களுக்குக் குறைவாகவும் மருந்துகள் தருவதற்கு வழிவகை செய்யப்படும். ஏற்கனவே, மருந்துத் தட்டுப்பாடு எதுவும் இருக்கக்கூடாது என்று உரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் " எலப் நிறுவனம் ".

*வினா எண். 137—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தருமபுரி மாவட்டத்தில் " எலப் நிறுவனம் " மூலம் நடந்து வரும் தொழுநோய் கட்டுப்பாட்டு பணியாளர்க்ள் சம்பள விகிதங்கள் சீரமைக்கப்படுமா ?

(ஆ) எலப் நிறுவனத்தை அரசு ஏற்று நடத்தும் உத்தேசம் உள்ளதா ?

(இ) எலப் நிறுவனத்திற்கு அரசு ஏதேனும் மான்யம் வழங்கி ஆதரிக்குமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) இது தனியார் நிறுவனமாக இருப்பதால் சம்பள விகிதங்கள் சீரமைப்பது பற்றி அரசு முடிவு செய்வதற்கு ஏதும் இல்லை.

(ஆ) தற்சமயம் இல்லை.

(இ) மானியம் வழங்கும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.